**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT NO.II, ERODE**

**STC.NO. 554/2017**

**Deposition of Witness for:** எ.சா 1 புகார்தாரர்தரப்பில் குறுக்கு விசாரணை

**Date: 27.05.2019**

**Name:திரு.ராம்குமார். த/பெ.ராமநாதன் வங்கி மேலாளர் சிட்டியூனியன் வங்கி, சங்ககிரி கிளை.**

நான் தாக்கல் செய்த எதசாஆ 1 கணக்குப்பட்டியலில் கடந்த 23.03.2017 அன்று புகார்தாரர் தங்வேல் அவரது வங்கிகணக்கிலிருந்து எதிரியின் வங்கி கணக்கிற்கு ரூ.50,000/-த்தை NIFT Transfer மூலம் அனுப்பிய பணம் எதிரியின் வங்கி கணக்கில் வந்துள்ளது என்றால் சரிதான். அவ்வாறு அனுப்பப்பட்ட பணத்தை 24.03.2017 அன்று எதிரி தன்னுடைய காசோலையை பயன்படுத்தி அப்பணத்தை எடுத்துள்ளார் என்றால் சரிதான். அதே போல் 19.04.2017 அன்றும் புகார்தாரர் தன் வங்கி கணக்கிலிருந்து ரூ.1,50,000/-த்தை எதிரியின் வங்கி கணக்கிற்கு NIFT Transfer மூலம் அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு அனுப்பப்பட்ட பணத்தை 20.04.2017 அன்று எதிரி தன்னுடைய காசோலையை பயன்படுத்தி அப்பணத்தை எடுத்துள்ளார் என்றால் சரிதான். 19.05.2017 தேதியிட்ட வாதசாஆ 1 காசோலை எங்கள் வங்கியிலிருந்து எதிரிக்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். வாதசாஆ 1 காசோலை போதிய பணமில்லை என வாதசாஆ 2 ரிட்டன்மெமோமூலம் திருப்பப்பட்டது என்றால் சரிதான்.

மறுவிசாரணை : இல்லை.